செ.வெ.எண் : 08/ஏப்ரல் நாள்:05.04.2020

**இராமநாதபுரம் மாவட்டம்**

# கீழக்கரை பகுதியில் நகராட்சி நிர்வாகம், தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை ஒருங்கிணைந்து மேற்கொண்ட கிருமி நாசினி தெளிக்கும் பணி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்.

இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை நகராட்சி பகுதியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் தீயணைப்பு மீட்பு பணிகள் துறை ஒருங்கிணைந்து, கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பொது இடங்களில் கிருமி நாசினி தெளிக்கும் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (05.04.2020) நேரில் சென்று பார்வையிட்டார்.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, இராமநாதபுரம் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்ந்து தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. டெல்லி மாநாட்டில் நமது இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து 41 நபர்கள் பங்கேற்றுள்ளனர். அவர்களில் 25 நபர்கள் மட்டும் நமது மாவட்டத்திற்கு திரும்பியுள்ளனர். அவர்கள் அனைவருக்கும் கொரோனா பரிசோதனைக்காக மாதிரி (Sample) அனுப்பி வைக்கப்பட்டது. அதில் 02.04.2020 அன்று 2 நபர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. மீதமுள்ள 23 நபர்களுக்கும் கொரோனா தொற்று இல்லை என பரிசோதனை முடிவுகள் வரப்பெற்றுள்ளன. அந்த வகையில் மாவட்டத்தில் இதுவரை மொத்தம் 34 நபர்களுக்கு கொரோனா பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. அதில் 32 நபர்களுக்கு கொரோனா தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் இருந்து இதுவரை இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 4,777 நபர்கள் திரும்பியுள்ளனர். அவர்களில் **2,711** நபர்கள் 28 நாட்கள் தனிமைப்படுத்துதல் காலம் முடிவடைந்து கொரோனா அறிகுறி ஏதும் இல்லாளமல் நலமுடன் உள்ளனர். மீதமுள்ள **2,066** நபர்கள் தற்போது அவரவர் குடும்பத்தாருடன் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். அவர்களின் வீடுகளில் மாவட்ட நிர்வாகம் மூலம் ஸ்டிக்கர் ஒட்டி அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இராமநாதபுரம் கீழக்கரை பகுதியைச் சேர்ந்த ஒருவர் கரோனா வைரஸ் தொற்றின் காரணமாக உயிரிழந்ததாக பொது சுகாதாரத் துறையின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இறந்தவரின் உடல் கீழக்கரையில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து கொரோனா முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இறந்தவரின் குடும்பத்தார் 11 பேர் அவரவர் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளனர். மேலும் அவரது இறுதிச் சடங்கில் சுமார் 50 நபர்கள் பங்கேற்றதாக கண்டறியப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரையும் தாமாக அவரவர் வீடுகளில் தனிமைப்படுத்திட அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இறந்தவரின் குடியிருப்பை சுற்றி உள்ள பகுதிகளில் நகராட்சி மற்றும் தீயணைப்பு துறையின் மூலம் கிருமிநாசினி தெளிப்பு மற்றும் சுற்றுப்புற சுகாதார பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் இறந்தவரின் குடியிருப்பிலிருந்து 7 கி.மீ. சுற்றளவிற்குட்பட்ட அனைத்து வீடுகளிலும் பொது சுகாதாரத் துறையினர் மூலம் ஒவ்வொரு வீடாக நேரடியாகச் சென்று பரிசோதனை மற்றும் அறிகுறி கண்காணிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. தற்போதைய சூழ்நிலையில் பொதுமக்கள் தேவையற்ற பயனங்களை தவிர்த்து, மாவட்ட நிர்வாகம் மேற்கொண்டு வரும் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்த நிகழ்வின்போது, சுகாதாரத்துறை துணை இயக்குநர் மரு.அஜித் பிரபு குமார், தீயணைப்பு நிலைய அலுவலர் திரு.கே.சம்பத்குமார், கீழக்கரை நகராட்சி பொறியாளர் திரு.மீரா அலி, வட்டாட்சியர் திரு.வீரராஜா உட்பட அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**